**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 158 of 2022**

Prosecution witness LW6 (PW9) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 29.01.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.தனபால் | Father Name | : | திரு.சென்றாயன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் மேட்டுசூளக்கரை என்ற இடத்தில் வசித்து வருகிறேன் . நான் சென்டிரிங் வேலை செய்கிறேன் . கேசவன் எங்கள் ஊர் முறையில் அண்ணன் உறவுமுறை ஆகும். கேசவன் என்ன வேலை செய்துக்கொண்டு இருந்தார் என்ற விவரம் தெரியாது . கேசவனின் பசங்க பெயர் ஏதும் தெரியாது , ஆனால் பொண்ணு பெயர் அன்புநிலா . சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக மேற்படி கேசவன் இறந்துவிட்டார் . நான் கோயம்புத்தூருக்கு அந்த சமயத்தில் சென்டிரிங் வேலைக்கு சென்று இருந்தேன் . அந்த சாவு நிகழ்ச்சியில் நான் கலந்துக்கொண்டேன் . அடிதடி ஏற்பட்டு அதனால் கேசவன் இறந்ததாக சொன்னார்கள் . கேசவனை யார் அடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. கேசவன் இறப்பு சம்பந்தமாக வேறெந்த விவரமும் எனக்கு தெரியாது . கேசவன் இறப்பு சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியாது. கேசவன் இறப்பு ஏற்பட்டு இரண்டு நாட்கள் கழித்து போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னிடம்

கையெழுத்து மட்டும் கேட்டார்கள் கையெழுத்து மட்டும் போட்டேன் மற்றப்படி ஏதும் கேட்கவில்லை.

<u>சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலீஸ் விசாரணையின் போது கடந்த 20.10.2021 அன்று மாலை 6.30 மணியளவில் நான் என் மகன் ஆம்ஸ்டிரங்கை சூளக்கரை பஸ் டாப் அருகே அழைத்து போவதற்காக வந்தபோது அந்த பஸ்டாப் அம்பேத்கர் சிலை அருகே கேசவனிடம் எங்கள் ஊரை சேர்ந்த சின்னபையன் மறுமகன் மேட்டுதாங்கல் கிராமத்தை சேர்ந்த தம்பிதுரை (எ) அறிவு தகராறு செய்து கொண்டு இருந்தார் என்றும் , அந்த சமயத்தில் அன்புநிலா மற்றும் தமிழ்குடிமகன் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார்கள் என்றும் , தம்பிதுரை கேசவனின் கன்னத்தில் மாறி மாறி கையில் அடித்து கையில் இருந்த வளையத்தை கழற்றி கேசவனின் வலது பக்க கண்ணுக்கு கீழ் குத்தினார் என்றும், அவர் கீழே விழுந்துவிட்டார் என்றும் , கீழே விழுந்த கேசவன் மீது தம்பிதுரை உட்கார்ந்தது நெஞ்சின் மீது குத்தினார் என்றும் நாங்கள் சத்தம் போட்டு தடுத்தோம் என்றும் , கேசவன் மூச்சு போச்சியின்றி கீழே கிடந்தார் என்றும், அவருக்கு தண்ணீர் கொடுத்து முதலுதவி செய்தோம் என்றும் , கேசவனை அவர் மகள் அன்புநிலா , தமிழ்குடிமகன் ஆகியோர் ஒரு காரில் ஏற்றி மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள் என்றும் , டாக்டர் பரிசோதனை செய்துவிட்டு இரவு 7.10 அளவில் அவர் இறந்துவிட்டதாக சொன்னதாக என்னிடம் தகவல் சொன்னார்கள் என்றும், இந்த சம்பவத்தை

நேரில் பார்த்துவிட்டு தற்போது சம்பவ சமயத்தில் கோயம்புத்தூருக்கு வேலைக்கு போய் இ ருந்ததாக சாட்சியத்தை மாற்றி சொல்கிறேன் என்றால் அது தவறு.

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை : இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.01.29 01:19:55 +0530